3-JAN 1956

தங்கத்தின் — தீங்கிழைக்கும் தன்மை

Regd. No. M 6207.

கிராமோதயம்

8 பக்கங்கள்

(அகில பாரத சர்க்கா சங்கத்தின் மாதமிருமுறை பத்திரிகை)

மலர் 2 | திருப்பூர் - செப்டம்பர் 1 * 1954 * விலை 1 அணா | இதழ் 21

பாராட்டுகிறோம் !

[சென்ற 15-8-'54 முதல் தமிழ் நாட்டின் பல பாகங்களிலும் சர்க்கா சங்க ஊழியர்கள் கிராமங்களில் பூமிதான யாத்திரை செய்து வருகின்றனர். பூமிதான இயக்கத்தைப்பற்றிய பிரசாரம் செய்வதுடன் கிராமங்களின் நில சம்பந்தமான புள்ளி விபரங்கள், விவசாயிகள் கடன் சுமை, முதலிய பல விஷயங்களை ஆராய்ச்சியும் செய்து நமக்கு அறிக்கைகள் வந்து குவிந்த வண்ணமிருக்கிறது. மேற்படி விபரங்கள் காலக்கிரமத்தில் தொகுத்தெடுத்து 'கிராமோதயத்தில்' வெளியிடப்படும்.

அகில பாரத சர்வ சேவா சங்கத்தின் தமிழ் நாட்டு பிரதிநிதி ஸ்ரீ பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள் தலைமையில் சிதம்பரம் தாலூக்காவில் நடைபெற்ற பூமிதான யாத்திரை விபரம் வேறிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அவர் ஆரம்பித்த யாத்திரையில் முதன் முதலில் தானே தனக்கு சொந்தமான 26 ஏக்கரில் 11 ஏக்கர் நிலம் தானமளித்து வழிகாட்டினார். சிதம்பரத்தில் சென்ற ஆண்டு குன்றக்குடி ஆதீன அடிகளால் கால் நடையாத்திரை நடந்த பின்னர் பயன்பெற்ற முதல் வெற்றி இதுவே ஆகும்!

இந்த விபரத்தை கேள்விப்பட்ட அகில பாரத சர்வ சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீ அண்ணாசாகேப் சகஸ்ரபுத்தே அவர்கள் அனுப்பியிருக்கும் செய்தியை சக ஊழியர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.]

— ஆசிரியர்

My dear Sri................

I have your letter dated 15-8-'54 and I have noted that the workers of Tamilnad Charkha Sangh have decided to pay special attention to Bhoodan and many of them will be on Bhoodan tour between 18-8-'54 and 2-10-'54. Sri Balakrishna Pillai has taken the lead by donating his 11 acres of land which worths about............ .... I believe that he has donated all the land belonging to him. He has inspired his relatives also and they have donated 2·11 acres, He will be participating in the Bhoodan March in the 3rd or 4th week of this month. Tamilnad Charkha Sangh workers have made a good beginning and I hope they will lead the other provinces. My congratulations to Sri Balakrishna Pillai.

Wishing you success.

Maganwadi
WARDHA
17-8-54

Yours sincerely,
Sd. A. W. Sahasrabudhe,

தங்கள் 15—8—54 தேதிய கடிதம் கிடைத்தது. அதிலிருந்து தமிழ் நாட்டு சர்க்கா சங்கத் தொண்டர்கள் பூமிதான யக்ஞ இயக்கத்தில் விசேஷ கவனம் செலுத்த தீர்மானித்திருப்பதாக அறிந்தேன். பல தொண்டர்கள் 15—8—54 முதல் 2—10—54 முடிய யாத்திரை செய்வதென்றும் முடிவு செய்துள்ளீர்கள்.

ஸ்ரீ பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள் தனக்கு சொந்தமான 11 ஏக்கர் நிலத்தை தானமாகக் கொடுத்து வழி காட்டியிருக்கிறார். அவர் தனக்கு சொந்தமான நிலமனைத்தையும் கொடுத்துவிட்டார் என்றே நம்புகிறேன். அவர் தனது உறவினர்களையும் தூண்டிவிட்டு சுமார் 2·11 ஏக்கர் தானமளிக்கச் செய்துள்ளார். அவர் 15—8—54 முதல் 18—8—54 முடியவும் மீண்டும் மூன்றாவது நான்காவது வாரங்களிலும் தானே பூமிதான யாத்திரை செய்ய திட்டமிட்டுள்ளார்.

தமிழ் நாட்டு சர்க்கா சங்க ஊழியர்கள் இந்த திசையில் நல்ல ஆரம்பம் செய்திருக்கிறார்கள்! அவர்கள் பிற மாகாணங்களுக்கு வழிகாட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

ஸ்ரீ பாலகிருஷ்ண பிள்ளை அவர்களுக்கு எனது நல்லாசிகள்.

உங்களுக்கு வெற்றி!

மகன்வாடி
வர்தா
17-8-54

தங்களன்புள்ள,
அ. வா. சகஸ்ரபுத்தே

சிதம்பரம் தாலூகாவில் பூமிதான யாத்திரை

சர்வ சேவா சங்க, சர்வோதய ஊழியர் கூட்டம்

8—8—54 ஞாயிறு மாலை 3 மணிக்கு சிதம்பரம் காதி வஸ்திராலயத்தில் சர்வ சேவா சங்க தமிழ் நாட்டுப் பிரதிநிதிஸ்ரீ அ. பாலகிருஷ்ண பிள்ளை முயற்சியின் பேரில் சர்வோதய, சர்வ சேவா சங்க ஊழியர் கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. கூட்டத்துக்கு ஸ்ரீ எல். எஸ். சுப்பராயப் பிள்ளை தலைமை வகித்தார்கள். கூட்டத்தில் அடுத்த சுதந்திர தினம் (15—8—54) முதற்கொண்டு காந்திஜி பிறந்த தினம் (2—10—54) வரை உள்ள காலத்தை சர்வ சேவா சங்கத் தொண்டர்கள் பூமிதான வேலையில் ஈடுபடுத்த வேண்டுமென்பதைப் பற்றி திருப்பூர் ஸ்ரீமான்கள் ராமச்சந்திரன், என். எஸ். சுப்ரமணியம், ஏ. நடராஜன் முதலியோரும் ஸ்ரீமான்கள் சங்கிலியாப் பிள்ளை, ராமசாமி அய்யர் (சென்னை விபாக் சஞ்சாலக்) வலியுறுத்தினார்கள். கூட்டத்திற்கு 120 பேருக்கு மேல் வந்திருந்தனர். தமிழ் நாட்டு பூமி தானக் கமிட்டி கன்வீனர் ஸ்ரீ ச. ஜெகந்நாதன், ஜில்லா பூமி தானக் கமிட்டி கன்வீனர் ஸ்ரீ ராமகிருஷ்ண ரெட்டியாரும் இதுவரை நடந்துள்ள பூமிதான வேலையைப்பற்றிப் பேசினர். கூட்டத்தின் முடிவில் சிதம்பரம் தாலூகாவில் 15—8—54ல் ஆரம்பிக்கும் பூமிதான யாத்திரை பற்றிய திட்டம் வகுக்கப்பெற்றது.

பூமிதான யாத்திரை

15—8—54 காலை 9 மணிக்கு அகில பாரத சர்வ சேவா சங்க தமிழ் நாட்டு பிரதிநிதி ஸ்ரீ அ. பாலகிருஷ்ண பிள்ளை தலைமையில் சிதம்பரத்திலிருந்து தொண்டர்கள் யாத்திரை புறப்பட்டனர். 23 பேர் யாத்திரையில் கலந்துகொண்டனர். குமராட்சி வரை பஸ்ஸில் சென்று அங்கிருந்து கால்

நடையாக நெய்வாசல் சேர்ந்து அன்று மாலை 3 மணிக்கு திருப்பூர் ஸ்ரீ வி. ர்ராமச்சந்திரன் அவர்களால் தேசீயக் கொடி ஏற்றுவிக்கப் பெற்று தாலூகா பூமிதானக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ எல். எஸ். சுப்பராயப் பிள்ளை தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. கொடியின் தத்துவம், சுதந்திரம் பெற்ற பின் நமது நாட்டிலும் உலகத்திலும் ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார நிலைகளைப் பற்றி ஸ்ரீ ராமச்சந்திரன் பேசி பூமிதான இயக்கத்திலுள்ள சம்பந்தத்தை விளக்கினார். ஸ்ரீ மு. ராமகிருஷ்ண ரெட்டியார் கூட்டத்தில் பேசினார்.

கூட்டத்தில் தமிழ் நாட்டு சர்வ சேவா சங்க பிரதிநிதி ஸ்ரீ அ. பாலகிருஷ்ண பிள்ளை 1 ஏக்கர் நன்செய் 10 ஏக்கர் புன்செயும் தானமாகக் கூட்டத் தலைவரிடம் சமர்ப்பித்தார். நெய்வாசல் ஸ்ரீ அருணாசலம் பிள்ளை, முத்தையா பிள்ளை இருவரும் 1 ஏக்கர் 30 செண்ட் நன்செய், ஸ்ரீ சுந்தரேசம் பிள்ளை 81 செண்ட் நன்செயும் தானமாக அளித்தனர். நெய்வாசலில் யாத்திரை கோஷ்டியினர் ஸ்ரீ அருணாசலம் பிள்ளை, முத்தையாபிள்ளை விருந்தினராக இருந்தனர்.

உறுதிமொழிகள்

மறுநாள் காலை யாத்திரை கோஷ்டியினர் கீழ் நெடும்பூர், மேல்நெடும்பூர் வழியாக வன்னியூர் வந்துசேர்ந்தனர். அங்குள்ள நிலச்சுவான்தார்கள் தானம் அளிக்க தமிழ் நாட்டு பிரதிநிதியிடம் வாக்களித்துள்ளனர். மாலை கோஷ்டியினர் லட்சுமி குடி சேர்ந்தனர். அங்கு இரவு ஸ்ரீ ராசுப்பிள்ளை வீட்டில் தங்கிவிட்டு மறுநாள் காலை மெய்யாத்தூருக்கு புறப்பட்டனர். நெடும்பூர், வன்னியூர் லட்சுமிகுடி, மெய்யாத்தூர் கிராம நிலச்சுவான்தார்கள் 10 ஏக்கர் நன்செய் தருவதாக சர்வ சேவா சங்கப் பிரதிநிதியிடம் வாக்களித்துள்ளனர். தாலூகா பூமிதானக் கமிட்டித் தலைவர் ஸ்ரீ எல். எஸ். சுப்பராய பிள்ளை 1 ஏக்கர் நன்செய் தானம் கொடுக்க வாக்களித்துள்ளார். யாத்திரை 18-8-54 தேதியோடு முடிவுற்றது. யாத்திரை சென்ற எல்லா கிராமங்களிலும் காவனூர் ஆதாரப் பாடசாலை மாணவர்களால் பூமிதான வில்லுப்பாட்டு நடைபெற்றது.

சர்வோதய பிரசுரங்கள் ரூ. 15க்கு விற்கப் பெற்றன. நிர்மாண ஊழியர்களான ஸ்ரீ ர. சம்பந்தம், டி. குஞ்சிதபாதம், சதாசிவம் பிள்ளை, க. சொக்கலிங்கம் ஆகியோரும் யுவர் காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ பா. ராமாநுஜம், காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ புருஷோத்தமன், ஸ்ரீமான்கள் சிவராமய்யர், அனந்தநாராயணன், சம்பத்து, சர்வ சேவா சங்க தொண்டர்கள் ஸ்ரீ கே. எஸ். கோவிந்தசாமி, முத்தையன் முதலியோர் யாத்திரையில் கலந்து கொண்டனர்.

— மு. ராமகிருஷ்ண ரெட்டி,
கன்வீனர், தெ. ஆ. ஜில்லா பூதானக் கமிட்டி.

தமிழ் நாட்டில் பூமிதான யாத்திரைகள்

திருச்சி ஜில்லா

திருச்சி ஜில்லா துறையூர் வட்டாரத்தில் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்நாடு பூமிதானக் கமிட்டி கன்வீனர் ஸ்ரீ ச. ஜெகந்நாதன் அவர்களின் தலைமையில் இம்மாதம் 17ம் தேதி முதல் 29-ம் தேதி வரை யாத்திரை செய்து 150 மைல்கள் நடந்து 56 கிராமங்களில் பிரச்சாரம் செய்யப்பட்டது. உப்பிலியபுரம் பிர்க்காவில் ஸ்ரீ வீரப்ப பிள்ளை, ஸ்ரீ நாராயணசாமி ரெட்டியார், ஸ்ரீ பெருமாள், ஸ்ரீ காந்தி, ஸ்ரீ கிருஷ்ணன், ஸ்ரீ மெய்யப்ப கவுண்டர் போன்ற ஊழியர்கள் சிறப்பான முறையில் இயக்கத்தை நடத்தினார்கள். துறையூர் வட்டார பூமிதான இயக்க கன்வீனர் ஸ்ரீ முத்துநல்லப்ப ரெட்டியார் உயர்தர கலாசாலையில் தமிழாசிரியராக இருந்துவருகிறார். பூமிதான இயக்கத்தில் தீவிரப் பற்றும் நம்பிக்கையும் உடையவர். ஆசிரியர் வேலையையும் பார்த்துக் கொண்டு இயக்கத்தையும் வெற்றிகரமாக நடத்தி வருகிறார். 258 பேர்கள் 336 ஏக்கர் 99 செண்ட் நிலம் தானம் கொடுத்திருக்கிறார்கள். 1954-ம் வருடம் ஏப்ரல் மாதத்திற்குள் சேர்க்கவேண்டிய கோட்டா ஆரம்பத்திலேயே உப்பிலியபுரம் பிர்க்காவில் பூர்த்தியாகிவிட்டது.

ஜில்லா ஆர்கனைசர்கள் ஸ்ரீ பழனிச்சாமி, ஸ்ரீ தர்மலிங்கம் ஆகிய இருவர்களும் யாத்திரையை துடர்ந்து முசிரி தாலூக்காவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

கோயமுத்தூர் ஜில்லா

கோவை ஜில்லாவில் ஸ்ரீ டி. பி. ராமசாமி அவர்கள் இயக்கத்தை நடத்த முயற்சி செய்தும் இன்னும் பலன் கிடைக்கவில்லை. அடுத்த மாதத்திலிருந்து கோபி செட்டிபாளையம் தாலூக்காவில் யாத்திரை ஆரம்பம் ஆகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மதுரை ஜில்லா

மதுரை ஜில்லாவில் ஸ்ரீ ஏ. ராஜு அம்பலம் அவர்களுடன் ஸ்ரீ கா. துரைராசு, ஸ்ரீ பெ. வெ. அழகர்சாமி, ஸ்ரீ சோலை ஆகியவர்கள் கொடைக்கானல் தாலூக்காவில் யாத்திரை நடத்தினார்கள். கொடைக்கானல் தாலூக்கா மலைப்பிரதேசமாக இருப்பதால் இதுவரையிலும் யாத்திரை தொடங்காமல் இருந்தது. இந்த யாத்திரையில் 8 ஊழியர்கள் கலந்துகொண்டனர். முதலில் கீழ்மலைப் பகுதியில் சுமார் 150 மைல்கள் நடந்து 32 கிராமங்களில் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தி இருக்கிறார்கள். 51·17 ஏக்கர் நிலதானமும் ஒரு ஜோடி மாடும், 30 கலப்பை செட்டுகளும் மற்றும் ஏராளமான அரிவாள் மண்வெட்டிகள் தானமாகப் பெற்றனர்.

தமிழ்நாடு பூமிதானக் கமிட்டிக் கன்வீனர் ஸ்ரீ ச. ஜெகந்நாதன், ஸ்ரீ ஆர். ஆர். கெய்த்தான் இருவரும் பட்டிவீரன்பட்டி, தாண்டிக்குடி, காப்பித் தோட்டம், பண்ணைக்காடு ஆகிய கிராமங்களுக்குச் சென்று குறிப்பிட்ட நிலச்சுவான்தார்களை சந்தித்து பேசினார்கள். பல நிலச்சுவான்தார்கள் நிலதானம் கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். 500 ஏக்கர் வரை இப்பகுதியில் சேர்த்துவிடலாம்.

கொடைக்கானல் தாலூக்கா மேல்மலைப் பிர்க்கா யாத்திரை 1—7—54ம் தேதி பெருமாள் மலையில் இருந்து திரு. ஏ. ராஜு அம்பலம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகியது. யாத்திரா கோஷ்டியில் ஸ்ரீ பெ. வெ. அழகர்சாமி, ஸ்ரீ கா. துரைராசு, ஸ்ரீ பெருமாள், ஸ்ரீ கதிரேசன், காமனூர் சுப்பையா, பரமசிவம், சிவராமன், சோலை மற்றும் பலரும் பங்கெடுத்துக்கொண்டார்கள். யாத்திரையின்போது 14 கிராமங்களில் 34 ஏக்கர் நிலதானமும் ஒரு ஜோடி மாடும் பெற்றுள்ளனர்.

மற்றொரு குழுவுடன் ஸ்ரீ வெங்கட்ராமன் அவர்கள் யாத்திரை நடத்தி வருகிறார்கள். அதில் ஸ்ரீ முத்துச்சாமி பிள்ளை, ஸ்ரீ வரதன், ஸ்ரீ பத்மாவரதன், ஆகியவர்கள் யாத்திரையில் கலந்துகொண்டு வருகின்றார்கள். பெரியகுளம் தாலூக்காவில் கோவிந்தபுரம் வெங்கடாசலபதிபுரம், காட்டுநாயக்கன்பட்டி, உப்பார்பட்டி, கோட்டையூர், காமராஜபுரம், டொம்பிச்

சேரி ஆகிய ஊர்களில் கூட்டங்கள் நடத்தி பிரசாரம் செய்திருக்கிறார்கள்.

ராமநாதபுரம் ஜில்லா

இராமநாதபுரம் ஜில்லா ஆர்கனைசர் ஸ்ரீ திருமலைர்களுடன் ஸ்ரீ நடராஜன், ஸ்ரீ குருசாமி ஆகியவர்கள அடங்கிய முதல் குழுவினர் இராமநாதபுரம் தென் பகுதியில் இயக்கத்தை நடத்தி வருகின்றனர். இக்குழுவினர் ஆகஸ்டு மாதத்திலிருந்து அருப்புக்கோட்டைத் தாலூக்காவிலும் சாத்தூர் தாலூக்காவிலும் யாத்திரை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறாகள்.

நெல்லை ஜில்லா

திருநெல்வேலி ஜில்லா ஆர்கனைசர் ஸ்ரீ ரெ. தெ. பெ. சுப்பிரமணிய நாடார் அவர்கள் தலைமையில் கோவில்பட்டி தாலூக்காவில் யாத்திரை நடத்தி வருகின்றனர். அவருடைய குழுவில் ஸ்ரீ கிருஷ்ணசாமி நாயக்கர், ஸ்ரீ ராமன், ஸ்ரீ பொன்னையா ஆகிய ஊழியர்களும் காந்தி நினைவு நிதி ஊழியர்களும் யாத்திரையில் கலந்துகொண்டிருக்கிறார்கள். கடம்பூர் பிர்க்கா கோட்டா பூர்த்தி செய்யப்பட்டு கோவில்பட்டி பிர்க்காவில் யாத்திரை ஆரம்பமானது. இக்குழுவினர் 20 கிராமங்களில் பிரசாரம் செய்து 93 ஏக்கர் நிலதானம் பெற்றிருக்கிறார்கள்.

தஞ்சாவூர் ஜில்லா

தஞ்சை ஜில்லாவில், 'சர்வோதயம்' ஆசிரியர் ஸ்ரீ என். ராமசாமி அவர்களும் தஞ்சை ஜில்லா கன்வீனர் ஸ்ரீ டி. கே. சீனிவாசன் ஆகியவர்களும் யாத்திரை நடத்திவருகிறார்கள்.

செங்கல்பட்டு ஜில்லா

செங்கல்பட்டு ஜில்லாவில் ஸ்ரீ மதன்ராஜ், ஸ்ரீ நாராயணசாமி ஆகியவர்கள் ஸ்ரீபெரும்புதூர் தாலூக்காவில் 13, 14 தேதிகளில் பிரசாரம் செய்து 19·27 ஏக்கர் நிலதானம் பெற்றிருக்கிறார்கள்.

—ச. ஜெகந்நாதன்.

திண்டிவனம்

திண்டிவனத்திற்கு அருகிலுள்ள பாங்குளத்தூர் கிராமத்திற்கு 22-8-54 தேதி ஞாயிற்றுக்கிழமையன்று கதர் வஸ்திராலய தொண்டர்களடங்கிய ஒரு சிறு கோஷ்டி சென்று பொதுக்கூட்டம் கூட்டி பூமிதான யக்ஞ பிரசாரம் செய்தனர். அவ்வூர் நிலச்சுவான்தார் ஸ்ரீ ஜானகிபதி நாயுடு அவர்கள் தமக்குள்ள 7 ஏக்கர் நிலத்தில் ஓரளவு நிலம் தருவதாக தெரிவித்துள்ளார்கள்.

—வி. திருவேங்கடய்யா.

சாத்தூர்

15-8-54 தேதி காலை 9-மணிக்கு சாத்தூர் காதி வஸ்திராலயத்திலிருந்து 'பூமிதான யக்ஞ பிரசார கோஷ்டி' புறப்பட்டு ஒ. மேட்டுப்பட்டி கிராமத்திற்கு சென்றனர். ஷை ஊர் கிராமோதய கதர் சங்கக் காரியதரிசி ஸ்ரீ போத்தி நாயக்கரும் யாத்திரையில் கலந்துகொண்டார். கூட்டத்தில் 'பூமிதான யக்ஞ' விஷயத்தைப்பற்றி விளக்கிக் கூறினர்கள்.

அதுசமயம் கீழ்க்கண்ட 'பூமிதானம்' கிடைத்தது.

		ஏ. செ.
வ. சு. வெங்கிடசாமி நாயக்கர்	- புஞ்சை	2·25
வே. வெ. ராமசாமி நாயக்கர்	- ,,	1·50
மொத்தம்		3·75

22-8-54 தேதி ஷை யாத்திரை கோஷ்டியினர் ராமலிங்கபுரம் கிராமத்திற்குச் சென்று பூமிதான யக்ஞ பிரசாரம் செய்தனர். அவ்வூர் கதரன்பர் திரு எஸ். கே. எஸ். சுந்தரரெட்டியார் அவர்கள் கூடிய சீக்கிரம் தனது காணிக்கையை செலுத்துவதாக வாக்களித்துள்ளார்.

—மு. ரா. கிருஷ்ணசாமி.

நொச்சிப்பாளையம்

நொச்சிப்பாளையம் காந்திய பாடசாலையைப் பற்றி 'கிராமோதய' நேயர்கள் அறிவார்கள். ஷை பள்ளிக்கூடம், அங்கு நடைபெறும் கிராமோதய கதர் சங்கத்தின் முயற்சியால் தோன்றியது. பள்ளியில் நூற்பு வகுப்புகள் நடக்கிறது. அதில் நூற்கப்படும் நூல் பள்ளிக்கூடத்தின் நிர்வாகத்திற்குப் பயன்படுகிறது.

ஷை பாடசாலை ஆசிரியரும், மாணவ, மாணவியர்களும் சென்ற 15-8-54 தேதி சுதந்திரதின விழாவைப் 'பூமிதான யக்ஞ விழா'வாகக் கொண்டாடினார்கள். தலைமை ஆசிரியர், புலவர் ஸ்ரீ ஏ. எம். சுப்பையா வாத்தியாரும், துணை ஆசிரியர், ஸ்ரீ இ. கொ. குப்புசாமியும், கிராமோதய கதர் சங்க நிர்வாக அங்கத்தினர்களும் தேசீய கீதங்கள், பூமிதானப் பாடல்களுடன் நொச்சிப்பாளையம், குங்குமம்பாளையம், சிறுகிணர், இச்சிப்பட்டி முதலிய கிராமங்களுக்குச் சென்று பூமிதான யக்ஞ பிரசாரம் செய்துவந்தனர்.

பிரதிதினமும் காந்தி ஜயந்தி வரை மாலை நேரங்களிலும், ஓய்வு நாட்களிலும் 'பூமிதான யக்ஞ' பிரசாரம் செய்வதாகத் திட்டமிட்டுள்ளனர்.

—புலவர் ஏ. எம். சுப்பையா.

திண்டுக்கல்

2-8-54 தேதி முதல் திண்டுக்கல் கதர் வஸ்திராலய நிர்வாகி ஸ்ரீ கருப்புசாமியும், மதுரை ஜில்லா பூமிதான யக்ஞ கமிட்டி கன்வீனர் திரு முனகால பட்டாபிராமய்யாவும், பூமிதான யக்ஞ ஆர்கனைசர் திரு. வெங்கட்ராமனும் திண்டுக்கல் தாலூக்காவின் வட பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்தனர். பல நிலச்சுவான்தார்களை சந்தித்துப் பேசினர். ஆவணி மாதம் கடைசிக்குள் சுமார் 200 ஏக்கர் வரை நிலம் தானமாக வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

15-8-54 தேதி காந்தி கிராமம் சென்று அங்குள்ள ஊழியர்களை கிராமங்களுக்கு வரும்படி அழைத்தபொழுது ஜில்லாபோர்டு தேர்தல்கள் காரணமாக அவர்கள் வர இயலவில்லை. செப்டம்பர் மாதம் 10 தேதிக்குமேல் பூமிதான யாத்திரைக்கு ஏற்பாடு செய்வதாக வாக்களித்துள்ளனர்.

16-8-54 தேதி தமிழ்நாடு பூமிதான யக்ஞ கன்வீனர் ஸ்ரீ ச. ஜெகந்நாதன் அவர்கள் தெரிவித்ததன் பேரில் செப்டம்பர் மாதம் 14, 15, 21, 22, 28, 29 தேதிகளில் யாத்திரை செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

22-8-54 தேதி ரெட்டியபட்டியில் முக்கிய நிலச்சுவான்தார்களைச் சந்தித்துப் பூமிதானம் கோரப்பட்டது.

—அ. கருப்புசாமி.

ஏழாயிரம்பண்ணை

15—8—'54 தேதி ஏழாயிரம் பண்ணையிலிருந்து சங்கரபாண்டியபுரம், ஆண்டியாபுரம் ஆகிய கிராமங்களுக்குச் சென்று பூமிதான யக்ஞப் பிரசாரமும், பூமிதானம் பெறுவதற்கு முயற்சியும் செய்யப்பட்டது. அவ்வூர்களிலுள்ள கிராமோதய கதர் சங்கத்தினர்களுடன் பிரசாரமும், புள்ளி விபரம் சேகரித்தலும், செய்யப்பட்டது.

22-8-'54 தேதி வெள்ளையாபுரம், கிருஷ்ணபுரம், தூங்காரெட்டியப்பட்டி முதலிய ஊர்களுக்குச் சென்று பூமிதான யக்ஞப் பிரசாரம் செய்யப்பட்டது.

மேற்படி கிராமோதய கதர் சங்கங்களில் தறியமைத்து உற்பத்தி நூலை அங்கேயே நெசவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டது.

(தொடர்ச்சி 95-ம் பக்கத்தில் காண்க)

கிராமோதயம்

செப்டம்பர் 1 1954

சங்கத்தின் — தீங்கிழைக்கும் தன்மை!

அழிவுப் பாதையில்

சமூகத்தில் தனி மனிதனின் வேலையின் மதிப்பு அந்த வேலையின் நோக்கத்தைக்கொண்டு கணக்கிடப்படுவதில்லை; அந்த வேலையில் சரீர உழைப்பு எவ்வளவு ஈடுபடுத்தப்பட்டுள்ளது, அறிவு எவ்வளவு ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பதை ஆதாரமாகக் கொண்டே அதற்கு மதிப்பு நிர்ணயிக்கப்படுகிறது, இதுதான் இன்றைய நிலை. இதன் பயனாக வேலையின் ஆத்மீக தரம் குறைந்து அனர்த்தம் விளைவிக்கக்கூடிய ஒருஅலாதி நிலை பணத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. சமுதாயத்திற்கு ஒரு பயங்கரமான சோதனை ஏற்பட்டுள்ளது.

முதலாளித்துவத்தின் பயன்

ஒவ்வொரு பொருளுக்கும் பணத்தின் அளவைக்கொண்டு விலை மதிப்பிடுவது முதலாளித்துவ சமூகத்தின் முக்கிய லக்ஷணமாகும். போட்டி முதலாளித்துவத்தின் உயிராகும். உடலுழைப்பு, அறிவு இவற்றின் போட்டியில் அறிவின் மதிப்பு அதிகமாவது ஒரு விதத்தில் தவிர்க்க முடியாததாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்த நிலைமை நீடித்திருக்கும் வரையில் சமூகத்தின் பொருளாதார ஏற்றத்தாழ்வு மறைவது என்பது முடியாததாகும். இது மட்டுமல்ல, உழைப்பின் உண்மையான மதிப்பை நிலை நிறுத்துவதும் அசாத்தியமாகும். இன்றோ உடலுழைத்தல் என்பது தாழ்மையின் அறிகுறியாகக் கருதப்படுகிறது. வேறு வழியின்றி ஜனங்கள் உழைக்கிறார்கள். முதலாளித்துவத்தினுடைய இந்த அடையாளங்கள் யாவும் மறையாதது வரையில் மோதல்களும் பூசல்களும் நீடித்திருக்கும்.

காகித துண்டுகளுக்கு தங்கத்தின் மதிப்பு— சட்டம் கொடுக்கிறது!

விருப்பு வெறுப்புகளின்றி சமூகத்தின் நன்மையை நோக்கமாகக்கொண்டு அறிவாலோ, உடலுழைப்பினாலோ செய்யப்படும் வேலையை ரூபாய் அணா பைசாவில் மதிப்பிடுவது எப்படி சாத்தியமாகும்? இரண்டு வஸ்துக்களில் சமமான குணங்களில்லாவிட்டால் ஒன்று மற்றொன்றின் மதிப்பை மதிப்பிடுவதற்குரிய அளவுகோலாவது எப்படி? தங்கம் வெள்ளியிலும், அவைகளின் மூலம் வாங்கப்படுகிற பொருள்களிலும், ஒன்று மற்றொன்றின் மதிப்பை மதிப்பிடுவதற்குரிய அளவுகோலாவதற்காக சமமான குணம் இல்லை. எல்லாம் கற்பனையே. இன்று தங்கம், வெள்ளியைப் பற்றிய பிரச்சினையே இல்லை. வர்த்தகத் துறையில் காகிதத்துண்டுகள்தான் நிறைந்திருக்கிறது. இந்த நிலைமையின் காரணத்தினால் இன்று எதற்கும் சட்டத்தைக் கடைப்பிடித்தோ அல்லது மீறியோ பணத்தை அபகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டாகி விட்டன.

மனிதனின் கடவுள் — பணம்!

இன்று எந்த தனி நபரும் சமூகத்தின் உபயோகத்திற்காக பொருள்களைத் தயாரியாமல், மார்க்கட்டில்விற்பதற்காக பொருட்களைத் தயாரிக்கிறார்கள். இதனால் உற்பத்தியாளர்கள் உ...ழைப்போர்களானாலும் சரி, அறிவைக்கொண்டு வேலை செய்வோர்களானாலும் சரி அவர்களு... சமூகத்தில் கௌரவம் இல்லாது போயி... அறிவைக்கொண்டு வாழ்வோனும், தன்னுடைய அறிவையும், ஞானத்தையும் விற்பனை தான் செய்கிறான். போட்டியின் மார்க்கட்டில் உழைப்பைக் காட்டிலும் அறிவிற்கு ரூபாய் அணா பைசாவில் இன்று அதிக விலை வருமானால் அதுவும் வாங்கக்கூடியதாகி விடுகிறது. இந்தச் சூழ் நிலையின் காரணமாக, இன்றைய சமூகத்தில் பணத்திற்கு கௌரவம் கிடைத்தது மட்டுமல்ல, அது மனிதனின் தெய்வமாகிவிட்டது! மனிதனும் மனிதனுடைய எல்லாவிதமான உழைப்புகளும் கௌரவக் குறைவுள்ளதாகி, மனிதனே பிறருக்கு அடிமையாகும்போது அவன் அழிவதற்கு எவ்வளவு நேரமாகும்?

அறிவை விற்பனை செய்தால் உற்பத்தி எவ்வாறு பெருகும்!

உடலுழைப்பைக் காட்டிலும் அறிவிற்கு பொருளாதார மதிப்பு அதிகமாக நிச்சயிக்கப்பட்டதால், உற்பத்தியைப் பெருக்கி தேசத்தை சுபிட்சமாக்குவது இன்று கடினமாகிவிட்டது. இன்று நம்முடைய தேசத்தில் "உற்பத்தியை பெருக்கு" என்று சிறியவர்கள், பெரியவர்கள் அனைவரும் கோஷமிடுகிறார்கள், ஆனால் உற்பத்தி தேவையான அளவிற்கு பெருகவில்லை. இதற்கும் மேலே கூறியதுதான் காரணமாகும். ஒரு பக்கத்தில் உடலுழைப்பின் மதிப்பை குறைவாகக்கணக்கிட்டு அதன் கௌரவத்தை குறைத்து, மற்றொரு பக்கத்தில் உற்பத்தியைப் பெருக்கு என்ற கோஷமிடுதல், இது வெள்ளத்தை எதிர்த்து நீந்தச் செய்யும் முயற்சியைப் போன்றிருக்கிறது.

எல்லா உழைப்பும் — சமமானது

மக்களின் உழைப்புத் தன்மை பெருகி, தேசம் சுபிட்சமடைந்து சமூகத்திலுள்ள எல்லாவிதமான ஏற்றத்தாழ்வுகளும் நீங்கி, சுரண்டல் ஒரேயடியாக நிற்க வேண்டுமென்பது நம்முடைய தீவிர விருப்பமாக இருக்குமானால், உண்மையுடன் செய்யப்பட்ட எல்லாவிதமான உழைப்பின் மதிப்புகளையும் சமமாகக்கருதி அவற்றின் பொருளாதார மதிப்பையும் நாம் சமமாகச் செய்ய வேண்டும். இதைப் போன்று எந்தவிதமான உழைப்பினாலும் உற்பத்தியாகக்கூடிய பொருள்கள் உபயோகத்திற்காக இருக்க வேண்டுமேயல்லாமல் விற்பனைக்காக இருக்கக் கூடாது.

அறிவை விற்பனை செய்வது நிற்க வேண்டும்

பொருளாதார முதலாளித்துவத்தைக் காட்டிலும், அறிவின் முதலாளித்துவம் அதிக பயங்கரமானது. ஏனென்றால் இரண்டாவது சூக்ஷ்மமானது, அதற்கு விஞ்ஞானத்தின் உதவியிருக்கிறது. பண்டைய காலத்து ரிஷிகளும், பிரம்மஞானிகளும் அதாவது அறிவைக்கொண்டு வாழ்க்கை நடத்தியவர்கள். அறிவை விற்பனை செய்யக் கூடாது, வெளவாமை விரதம் மேற்கொள்ள வேண்டும், என்று நியதி ஏற்படுத்தியிருந்தார்கள். இதில் அவர்களின் நோக்கத்திற்கு ஆதாரம் கிடைக்கிறது. ஆகையால் எல்லாவற்றிற்கும் முதலாவதாக அறிவாளி வர்க்கத்தவர்கள் தங்களின் அறிவை விற்பனை செய்வதை விட்டுவிட வேண்டும்.

பார்த்தும், கேட்டும், நடந்தும் தொழில் புரிந்தும் உயிர்வாழ் — அல்லது இறத்தல்தான் வழி!

ஆண்டவன் நமக்கு ஐந்து ஞானேந்திரியங்களை ஐந்து கர்மேந்திரியங்களையும் அளித்திருக்கிறார். பார்ப்பதற்கு கண்களையும், கேட்பதற்கு காதுகளையும், நடப்பதற்கு கால்களையும், வேலை செய்வதற்கு கைகளையும் உபயோகப்படுத்த வேண்டுமென்பதை ஆண்டவன் தெளிவாக்கியிருக்கிறார். பசியைத் தணிப்பதற்கு மனிதனுக்கு தானியம் தேவைப்படுகிறது. தானியம் உற்பத்தி செய்வதற்கு உடல் உழைக்க வேண்டியிருக்கிறது. மனிதன் உழைக்க வேண்டுமென்பது இயற்கையானதும், நியாயமானதுமாகும். மனிதனுக்கு உழைப்பின்றி வேறு வழியில்லை. அவன் உழைக்கவில்லையென்றால் மரணத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். மனிதன் தானே உழைத்து உணவு உற்பத்தி செய்ய வேண்டுமென்பது இயற்கையின் நியதியே என்று கருத வேண்டும். இந்த மனித நியதி மீறும் அளவிற்கு தண்டனை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்று சொல்லத்தேவையில்லை. மிருகங்கள், பக்ஷிகள் முதலியவைகள் அவற்றின் உணவிற்காக அவைகளே உழைக்க வேண்டியிருக்கிறது. இயற்கை எவ்வளவு கொடுக்கிறதோ அதைக்கொண்டே வாழ்க்கையை நடத்திச் செல்லலாமென்பது அவற்றின் இயற்கையான சுபாவம். ஆனால் மனிதனின் நிலை இப்படியில்லை. ஆகையால் அவன் உழைப்பது தவிர்க்க முடியாததாகும்.

— *சங்கர்ராவ் தேவ்*

⁂

பூதான யக்ஞம் அடிப்படையில்—புரட்சிகரமான இயக்கம்

சுதந்திர இந்தியாவின் இளமைப் பருவம்

நமது அரசியல் சுதந்திரம் கிடைத்து ஏழு ஆண்டுகள் கழிந்துள்ளது. எந்த ஒரு நாட்டின் வாழ்விலும் இது ஒரு நீண்ட இடைவெளியாக கருத முடியாது. ஆனாலும், இந்த நாட்கள் இது போன்ற வேறு வேலைக் காலத்தைக் காட்டிலும் மகத்துவத்தில் குறைந்ததல்ல. மனிதனின் வாழ்க்கையில் முதல் ஏழு ஆண்டுகள் அவனது குணங்களை உருவாக்கும் திசையில் வழிகோலுகின்றது. ஒரு அளவு முன் அறிவிப்பாகவும் இருக்கிறது. இவ்விஷயம் ஒருக்கால் ஒரு நாட்டிற்கும் பொருந்தக்கூடும். நாட்டின் ஆட்சி நம் கைக்கு வந்தபோது, "நாட்டுப் பிரிவினையின் விளைவுகளை சமாளிக்க முடியாமல் தேசம் சின்னாபின்னமாகிவிடும். அரசாங்க ஏற்பாடுகள் அழிந்துவிடும், சட்டத்திற்கு மதிப்பு இருக்காது. உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு இருக்காது" என்று பலர் சொல்லியதுண்டு. அநேகர், திடீரென்று பெரிய குழப்பம் ஏற்பட்டுவிடக் கூடாதே என்று பயப்பட்டனர். சிலரோவெனில் இக்குழப்பத்தை எதிர்நோக்கியிருந்தனர். ஆனால் பின்னர் ஏற்பட்ட நிலைமையைக் கண்டு நமது எல்லா நண்பர்களும், விரோதிகளும் மிகவும் அயர்ந்து விட்டனர். இன்று நமது தேசம் நல்ல கட்டுக்கோப்புடனிருந்து வருகிறது. சர்க்காரின் உத்திரவு அமலாகாத யாதொரு பாகமும் இங்கு கிடையாது. அரசாங்கம் நன்கு நிலைத்துவிட்டது.

கௌரவமான அயல் நாட்டுக் கொள்கை

எந்த நாட்டவராயினும ஒருவர் நம் தேசத்தின் ஒரு மூலையிலிருந்து மறு மூலைக்கு எவ்வித ஆபத்துமின்றி சென்று வரலாம். வெளிநாட்டு விவகாரங்களில் நமது கொள்கையை எல்லோரும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் யாவரும் அதற்கு மரியாதை கொடுக்கின்றனர். உலகில் நேர்மையோடும், சுதந்திரமாகவும் பிரசினையைப் பற்றிச் சிந்தனை செய்யக்கூடிய நாடு என்ற கௌரவம் நமக்கு கிடைத்துள்ளது.

சமூகப் பொருளாதாரப் புரட்சியும் வருகிறது

பொருளாதார சமூகத்துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. எனினும் அத்துறையிலும் நாம் திட நிச்சயத்தோடிருக்கிறோம். அரசியல் சுதந்திரத்திற்காக நாம் போராடியது, பழைய ரீதியிலேயே தேச வேலைகளைச் செய்து வருவதற்கல்ல. எவ்வளவு சீக்கிரத்தில் சாத்தியமோ அவ்வளவு விரைவில் சமூகப் பொருளாதாரத் துறையில் புரட்சி செய்வதே நமது லட்சியமாகும். ஜாதி மத வர்க்க பேதமற்ற ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிக்க நாம் விரும்புகிறோம். அதில் எந்தவிதமான சமூகப் பொருளாதார ஜாதி மத சுரண்டலும் இருக்காது.

வேற்றுமைகள் குமுறுகின்றன

இன்று நம் சமுதாயத்தில் பொருளாதாரத் துறையில் அனியாயமும், சமூக வேற்றுமைகளும், ஜாதி துவேஷம், பொறாமை, மூடப்பழக்கங்கள், மாகாணப்பித்து மொழிகளின் மீது வெறுப்பு போன்ற பயங்கரமான குறைகள் இருப்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். இவையாவும் நமது யோக்யதை, தைரியம், புத்தி ஆகியவற்றிற்கு ஓர் அறைகூவலாகும். நாம் ஒரு சிறந்த நாகரீக சமுதாயமாக வாழ விரும்புவோமானால், சீக்கிரத்தில் இந்த தீமைகளிலிருந்து விடுபட வேண்டும்.

சமூகம் முன்னேற பலாத்காரம், சட்டம், அஹிம்சை முறைகள்

சமூக முன்னேற்றத்தில் மூன்று படிகள் உண்டு. முதலாவது காட்டுமிராண்டி வாழ்க்கையாகும். அதில் சுயநலமும் பலாத்காரமும் தலைதூக்கி நிற்கும். இரண்டாவது சட்டம் பிரதானமாகி மக்களை கட்டுப்படுத்தக்கூடியது. அங்கு கோர்ட்டுகள் உண்டு. போலீஸ் மூலமும் சிறைச்சாலைகள் மூலமாகவும் நியாயம் வழங்கப்படும். கடைசிப்படி இதுதான். அங்கு அஹிம்சையும் தன்னலமின்மையும் சிறந்து விளங்கும். அங்கு அன்பும் சட்டமும் ஒன்றாயிருக்கும். சமூக முன்னேற்றத்தின் இம் மூன்று படிகளும் அதாவது காட்டுமிராண்டி முறை, நியாயஸ்தலம் மூலம் சட்ட ஆட்சி முறை—அன்பு வழி ஆகிய இவை படிப்படியான சமூக முன்னேற்றத்தின் லக்ஷணமாகும். சிறந்த நாகரீகமுள்ள மனிதத்தன்மையின் இறுதி லக்ஷியத்தை அடைய, தன்னலத்தையும் தனி நபரின் ஆவலாதிகளையும் தியாகம் செய்யக்கூடிய ஆண்களும் பெண்களும் தேவைப்படுகிறது. அவர்கள் பிறர் சுகமாக வாழ வேண்டுமென்பதற்காக தினமும் தன்னுயிரைக் கொடுக்கத் தயாராயிருக்க வேண்டும்.

தவப்புதல்வர்

நல்ல மனிதர்கள் தங்களது தவத்தால் உலகத்தை ஸ்திரமாகவைத்திருக்கின்றனர். ஆச்சார்ய வினோபாபாவே அத்தகைய ஒரு தவச்சிரேஷ்டராவார். அவர் இன்று நமது தேசத்தின் பொருளாதார சமூகத்துறையில் அன்பின் ஆட்சியை நிலைநிறுத்த விரும்புகிறார்.

3 - JAN 1956
MADRAS

நாம் மனிதர்கள் — தேவதைகளாக முடியாது

நாம் ஒவ்வொருவரும் தேவதைகளாகவோ, தேவதூதர்களாகவோ ஆகமுடியாதாகையால், சமுதாய அமைப்பில் மாறுதலைக் கொண்டுவர சட்டத்தின் உதவியை நாட வேண்டியிருக்கிறது. இம் மாறுதலின் அவசியத்தை நோக்குங்கால், பூமிதான யக்ஞத்தின் மகத்துவம் மிகவும் அதிகரிக்கிறது. நமது நாட்டின் பரம்பரையில் ஒன்றரக்கலந்துள்ள நற்பண்புகளின் மீது இந்த இயக்கம் நம்பிக்கை வைத்து வலியுறுத்துகிறது. இந்த இயக்கத்தில் "வசுதைவ குடும்பகம்" என்ற பொதுநீதி மிளிர்கிறது. உலோகாயத சுகங்களின் மீதுள்ள ஆசையை தியாகம் செய்தால்தான் ஆன்மீக முக்தி கிடைக்கும் என்ற நமது சமய உணர்ச்சிகளை இவ்வியக்கம் நடைமுறைக்கு கொண்டுவருகிறது.

புரட்சிகரமான தார்மீக இயக்கம்

வினோபாவின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட இவ்வியக்கம் அடிப்படையில் புரட்சிகரமானது. சமூகத்தின் எல்லா வர்க்கத்தினரும், இவ்வியக்கத்திற்காக வினோபா விடுத்த வேண்டுகோளை வரவேற்கின்றனர். இது நமது தேசத்தின் நீதி வாழ்வின் உயர்வை நிலை நாட்டுகிறது. இந்த இயக்கத்திற்கு சிரத்தையே ஆதாரமாகும். இதன் மூலம் கிராமீய வாழ்வில் புரட்சியைக் கொண்டுவர முடியாமற் போகுமேயானுலுங்கூட ஒரு நல்ல சூழ்நிலை கட்டாயம் ஏற்படும். அந்த சூழ்நிலையில் நிலப்பிரச்னைக்கு பரிகாரம் காணும் வேலையை தைரியமாகச் செய்ய முடியும்.

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

இந்திய விவசாயத்திற்கு இயந்திரமயமாக்கப்பட்ட பெரும்பண்ணைகள் பொருந்தாது!

சில புள்ளி விபரங்கள்

நாம் வசிக்கும் பூமண்டலத்தின் பரப்பு — நீரும் — நிலமும் சேர்ந்து, சுமார் 20 கோடி சதுரமைல் விஸ்தீரணம் உள்ளது. இதில் கால்பாகத்திலும் சிறிது கூடுதலாகத்தான் நிலம் இருக்கிறது. நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பகுதிதான் விவசாயத்திற்கு லாயக்குள்ளதாக இருக்கிறது; அதாவது சுமார் 1 கோடி 60 லட்சம் சதுரமைல் பரப்பில் தான் சாகுபடி செய்யமுடியும். இது சுமார் 1000 கோடி ஏக்கர் பரப்புடையதாக இருக்கும். இவ்வளவு சாகுபடிக்கு லாயக்குள்ள நிலத்தில் சுமார் 300 முதல் 400 கோடி ஏக்கரில்தான் தற்சமயம் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது.

தலைக்கு 75 செண்டு நிலம் சாகுபடி

உலக ஜனத்தொகை இன்று சுமார் 235 கோடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகையால் உலகில் சராசரி ஒரு நபருக்கு 1·5 ஏக்கர் வீதம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவில் சராசரி ·75 ஏக்கர் (75 செண்டு) தான் விவசாயத்தின் கீழிருக்கிறது.

பெரும்பண்ணைகள் நிலத்தை கெடுத்துவிடும்

இவ்வளவு குறைந்த சராசரி விவசாய நிலத்தைக்கொண்டு உற்பத்தியை பெருக்குவதெப்படி என்பது ஒரு உலக பிரச்னை. இதை சிறு பண்ணைகள் மூலம் சாதிக்கலாமா, அல்லது பெரும் பண்ணைகள் மூலம் இயந்திர சாதனங்களை ஈடுபடுத்தி செய்யலாமா என்பதே பிரச்னை!! பெருவாரியான இயந்திர முறைகளை ஈடுபடுத்திஉற்பத்தியை பெருக்குவது சாத்தியம். ஆனுல் பல நில ... நிபுணர்கள், இம்மாதிரி செய்வதால் ... வளமையும், உற்பத்தி சக்தியும் குன்றிவிடும் ... அபிப்ராயப்படுகின்றனர்.

உலக நிபுணரின் கருத்து

இது நம் நாட்டிற்கு பொருத்தமான ஒரு பிரச்னை. இது சம்மந்தமாக நில உபயோக சம்மந்தமாக உலகத்திலேயே தலைசிறந்த ஆராய்ச்சியாளரென்று கருதப்பட்டு வரும் டாக்டர் எல். டட்லி ஸ்டாம்பு அவர்கள் கருத்தைக் கீழே தருகிறோம். அவர் "நாளைக்கு நிலம் ("Land for Tomorrow") என்ற தனது புத்தகத்தில் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

நல்ல விதை, சிறந்த உரம், உற்பத்தியை பெருக்கும்

"லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு சீர்திருத்தப்பட்டுள்ள விவசாய கருவிகளையும், சிறந்த உரமும், நல்ல விதைகளும் கொடுத்து அவைகளை பயன்படுத்தும் முறைகளையும் போதித்தால், அவர்களுக்கு நல்ல விளைச்சலும், அதிக உற்பத்தியும் நிச்சயமாகக் கிடைக்கும். இதன் பயனுக அவர்களுடைய உழைப்புத் திறனையும், அவர்கள் குடும்பத்தின் சக்தியையும், அவர்களுடைய வேலை மாடுகளின் சக்தியையும் அதிகரிப்பதோடன்னியில், விற்பனைக்கும் மிச்சமாகும்,

மனித சக்தியை தவிர்ப்பதால் அனர்த்தம்

"மனிதன் உழைப்பைத் தவிர்த்து விவசாய உற்பத்தியை தற்சமயம் அதிகரிப்பதால் ஒன்றும் சாதிக்க முடியாது என்பதை கவனிப்பது நலம். அம்மாதிரி செய்தால் நாட்டின் பொருளாதார இயல்பே தலைகீழாகிவிடும். கியாஸ் அல்லது மண்ணெண்ணையை எரிக்கும் ஆயில் எஞ்சின்களுக்குக் கூட இடமிருக்கிறதா என்று சந்தேகப்படுகிறேன். ஏனெனில் அவை விவசாயிகளிடமிருந்து தனது மாடுகளையும், அவை கொடுக்கும் எருவையும் அகற்றிவிடும். இந்தியா சீர்திருத்திய சிறு கருவிகளையே உபயோகித்தல் நலம். பெரிய இயந்திரமயமான பண்ணைகளைக்காட்டிலும் இதுவே சிறந்தது.

அமெரிக்க சாதனங்கள் இங்கு பொருந்தாது

"அமெரிக்க விவசாயத்திற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள விவசாய இயந்திரங்கள் பழைய உலகத்திற்கு உகந்ததல்ல. சிறிய பண்ணைகளில் சிறிதும், பெரிதுமாக கலந்த சீரான விவசாயத்தை நோக்கித்தான் உலகம் போய்க்கொண்டிருக்கிறது."

சிறு பண்ணைகளும் எளிய முறைகளும் போதும்

ஆகையால் நிலத்தைப் பாழ்படுத்தாமல் சிறு பண்ணைகள் மூலமாகவே உற்பத்தியை அதிகரிப்பது சாத்தியம். இம்மாதிரி செய்தால் தற்சமயமிருக்கும் உலக ஜனத்தொகையைப் போல் நான்கு மடங்கு அதிகம் ஜனத்தொகையைப் பராமரிப்பதும் சாத்தியமாகும்.

இந்த ஆலோசனையை, நாம் நமது எருதுகளை இயந்திரங்களால் மாய்ப்பதற்குள், பின்பற்றுவோமாக!!

From, 'Harijan,' 14–8–'54. } வி. எம். கோத்தாரி

*

அகில பாரத சர்வ சேவா சங்கம், திருப்பூர் விபாக்

1953-54 ஆண்டு அறிக்கை

விபரம்		1952-53	1953-54
கதர் வேலை நடைபெறும் கிராமங்கள்	எண்	1,231	1,290
பதிவு செய்யப்பட்ட நூற்போர்	,,	59,199	61,300
பதிவு செய்யப்பட்ட தறிகாரர்கள்	,,	541	748
இதர தொழிலாளர்கள்	,,	70	95
மொத்த தொழிலாளர்கள்	,,	59,810	62,143
நூற்போர் குடும்பங்கள்	,,	19,733	20,433
தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்ட கூலி விபரம்:-			
நூற்போர்கள்	ரூ.	4,39,095	9,72,198
தறிகாரர்கள்	,,	2,02,977	5,26,678
இதர தொழிலாளர்	,,	93,940	74,607
(சாயம், அச்சு, ராட்டை முதலியன)			
மொத்தம் கொடுக்கப்பட்ட கூலி	ரூ.	7,36,012	15,73,483
தொண்டர்கள்	எண்	184	154
நூல் உற்பத்தி சிட்டம்	,,	24,72,276	52,14,302
,, கிரயம்	ரூ.	5,99,746	12,59,019
கதர் உற்பத்தி ச. கெஜம்		5,11,057	14,51,053
,, கிரயம்	ரூ.	9,78,966	27,62,432
சுயதேவை கதர் உற்பத்தி	,,	2,14,125	2,61,786
கதர் விற்பனை கிரயம்	,,	10,56,602	12,87,364
(நூற்போர் & சில்லரை விற்பனை)			
நூற்புக் கருவிகள் உற்பத்தி	,,	27,303	54,507
நிறுவப்பட்டு வேலை செய்து வரும் கிராமோதய கதர் சங்கம்	எண்		52
ஷை சங்கங்களின் நூல் உற்பத்தி சிட்டம்	எண்		8,07,566
கிரயம்	ரூ.		1,94,648
ஷை சங்கங்களின் கதர் உற்பத்தி ச. கெஜம்			41,974
,, கிரயம்	ரூ.		70,690
ஷை சங்கங்களின் கதர் விற்பனை கிரயம்	ரூ.		73,891

(91-ம் பக்கத் தொடர்ச்சி)

"கிராமோதயம்" சந்தா 14 சேர்ந்தது.

— அ. ஈஸ்வரசுப்ரமண்யம்

காரைக்குடி

15—8—'54-22—8—'54ந் தேதிகளில் "ஆவுடைப்பொய்கை" என்ற கிராமத்திற்குச் சென்று பூமிதான யக்ஞப் பிரசாரமும், நில உடமை சம்பந்தமான புள்ளி விபரங்கள் சேகரித்தும் வந்துள்ளோம்.

— சு. லட்சுமணன்

படியூர்

15—8—'54 தேதி தம்புரெட்டிப்பாளையம் சென்று அங்கு கிராமோதயக் கதர் சங்க ஆதரவில் நடந்த பொதுக்கூட்டத்தில் பூமிதான யக்ஞப் பிரசாரம் செய்யப்பட்டது. மறு முறை இந்த கிராமத்திற்கு பூமிதான கோஷ்டி யாத்திரையாக வரும் முன் ஆலோசித்து யாவரும் நிலதானம் கொடுப்பது பற்றி முடிவு செய்வதாக வாக்களித்துள்ளார்கள்.

ஒரு முதியோர் கல்வி பாடசாலை நிறுவவும் தீர்மானிக்கப்பட்டது. மதுபானம் செய்வோரும் கள்ளச் சாராயம் காய்ச்சுவோரும் அதைக் கைவிட்டுவிடுவதாக கோவிலில் பிரமாணம் செய்து கொண்டார்கள்.

— எஸ். சுப்பையன்

கடலூர்

21—8—'54 மாலை கடலூர் வர்த்தக சங்கக் கட்டிடத்தில் ஸ்ரீ எஸ். ஏ. தேவநாயகய்யா அவர்கள் தலைமையில் சர்வோதய ஊழியர்கள் கூட்டம் நடந்தது. தென் ஆற்காடு ஜில்லா பூமிதான யக்ஞ கன்வீனர், ஆத்திப்பாக்கம் ஸ்ரீ ராமகிருஷ்ண ரெட்டியார் அவர்கள் பேசுகையில் சிதம்பரத்தில் ஏற்பட்டுள்ள ஒரு நல்லுணர்ச்சியை கடலூருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஸ்ரீமான்கள் எம். வேணுகோபால், பி. தணிகாசலம், என். சுந்தரம் செட்டியார், எம். எத்திராஜ் முதலியோர்களும் பூமிதான யக்ஞம் வெற்றி பெறுவதற்கான ஆலோசனைகளைக் கூறினர்கள்.

ஸ்ரீ ஏ. வி. குப்புசாமி, வி. எல், ராமகிருஷ்ண ரெட்டி, என். சுந்தரம் செட்டியார், எஸ் ஏ. தேவநாயகய்யா, எம். வி. சுதர்சனம் ஆகியோர் அடங்கிய யாத்திரை கோஷ்டி அமைக்கப்பட்டது.

— ஏ. வி. குப்புசாமி

நாகப்பட்டினம்

15—8—'54-ம் தேதி காலை 7-மணிக்கு யாத்திரை கோஷ்டியினர் 'ஐவநல்லூர்' கிராமத்திற்கு சென்று பூமிதான யக்ஞ பிரசாரமும், கிராமப் பொளாதார, நில உடமை ஆராய்ச்சியும் செய்து புள்ளிவிபரங்களுடன் திரும்பினர். "கிராமோதயம்" சந்தா 5 சேர்க்கப்பட்டது. கிராமத்தில் எண்ணை ஆட்டுவதற்கு ஒரு சீர் திருத்திய 'செக்கு' போடுவதாக தீர்மானித்துள்ளார்கள்.

— லோகநாதன்

மாயூரம்

22—8—'54-ம் தேதி பூமிதான யக்ஞ பிரசார கோஷ்டியினர் "திருநின்றியூருக்கு" சென்று மாலை 6-30 மணிக்கு ஒரு பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். சுமார் 50 பேர்கள் ஷை கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்தார்கள்.

காந்தியடிகளுடன் தென் ஆப்ரிக்காவில், அவரது சத்தியாக்கிரஹ ஆசிரமத்தில் வசித்து வந்த ஸ்ரீ ஸி. அருணாசலப் படையாச்சி அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அலவேரி ஸ்ரீ வைத்தியநாத முதலியார், ஒலையாம்புத்தூர் ஸ்ரீ ராஜு பிள்ளை, ஸ்ரீ வி. சுப்பிரமணிய முதலியார் ஸ்ரீ துரையப்ப சோழனர், ஸ்ரீ வெங்கடேச சோழனர் ஸ்ரீ திருநாவுக்கரசுப் பிள்ளை முதலியவர்கள் கூட்டத்திற்கு விஜயம் செய்திருந்த மற்ற பிரமுகர்களாவார்கள்.

ஸ்தல பொதுஉடமை தோழர் ஸ்ரீ செல்வராஜும் கூட்டத்திலும், விவாதங்களிலும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

கூட்டத்திற்கும், மற்ற வசதிகளுக்கும் திரு. முத்துசாமி பிள்ளை அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

எல்லா மிராசுதார்களும் பூமிதானம் கொடுப்பது பற்றி பரிசீலனை செய்து கூடிய சீக்கிரம் முடிவு செய்வதாக வாக்களித்துள்ளார்கள்.

— ஏ. வி. வெங்கட்ராமன்

CONNEMARA PUBLIC LIBRARY
3 - JAN 1956
MADRAS

பூவத்தக்குடி

20—8—'54-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை வஸ்திராலயத்திலிருந்து புறப்பட்ட யாத்திரை கோஷ்டி 'புதுக்கோட்டை உள்ளூர்' கிராமத்தில் பூமிதான யக்ஞ பிரசாரமும், நில உடைமை, புள்ளி விபரங்கள் சேகரித்துக்கொண்டு மாலை திரும்பினார்கள்.

17—8—'54, 20—8—'54-ம் தேதிகளில் முறையே பூவத்தக்குடி, மாங்குடி கிராமங்களில் பூமிதான யக்ஞ பிரசாரமும், கிராமப் பொருளாதாரம் சம்மந்தமான ஆராய்ச்சியும் செய்து வந்தனர்.

— கே. நடராஜன்

கும்பகோணம்

22—8—'54-ம் தேதி காலை யாத்திரை கோஷ்டி நகரின் முக்கியமான நிலச்சுவான்தார்கள் இருக்கும் தெருக்கள் வழியாக பூமிதான கோஷங்கள், பாடல்களுடன் புறப்பட்டு நான்கு மைல் தூரத்திலிருக்கும் 'வலையபேட்டை மாங்குடி' கிராமத்தில் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பாரத்சேவக்சமாஜ் கன்வீனர் திரு. கல்யாண சுந்திரம் பிள்ளை அவர்களும் நகர காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் ஸ்ரீ ஸி. சாமிநாத செட்டியார் அவர்களும் பூமிதான யக்ஞ சொற்பொழிவாற்றினார்கள்.

— ஆர். ஸ்ரீனிவாசராவ்

திருச்சிராப்பள்ளி

15—8—'54-ம் தேதி மாலை உறையூரிலிருந்து கடைத்தெரு வழியாக பூமிதான யக்ஞ கோஷத்துடன் ஸ்ரீ ப. சங்கிலியா பிள்ளை அவர்கள் தலைமையில் யாத்திரை கோஷ்டி (சுமார் 20 பேர்கள்) முருங்கப்பேட்டைக்கு சென்றனர். அங்கு சுமார் 150 பேர்கள் கோஷ்டியில் சேர்ந்து கொண்டு முத்தரசநல்லூர் அடைந்தனர். மாலை சர்வ சமய பிரார்த்தனையுடன் பூமிதான யக்ஞக் கூட்டம் நடைபெற்றது. திரு. சங்கிலியா பிள்ளை, திரு. நடராஜன், திரு. ஏ. எஸ். ராமசாமி ஆகியோர் பூமிதான யக்ஞத்தைப் பற்றி விளக்கினார்கள்.

— எஸ். சொக்கலிங்கம்

காட்டுமுன்னூர்

22—8—'54-ம் தேதி காலை சுமார் 17 பேர்கள் கொண்ட கோஷ்டி "பூமிதானம்" கொடுங்கள் என்ற விளம்பர அட்டைகளுடன், பரமத்தி, நல்லிபாளையம், துலுக்கன்பாளையம், நடந்தை, காளிபாளையம் ஆகியகிராமங்கள் வழியாக பூமிதான பாடல்கள், பூமிதான கோஷங்களுடன் பிரசாரம் செய்து மாலை 5-மணிக்கு திரும்பினர், பூமிதான பிரசாரத்துடன் கிராமக் கைத்தொழிலபிவிருத்திக்கான வழிவகைகளையும் எடுத்துரைக்கப்பட்டது. இந்த யாத்திரை கோஷ்டிக்கு பரிசோதகர் திரு ஏ. எஸ். ராமஸ்வாமி தலைமைதாங்கி நடத்தினர். சுமார் 15 மைல் செய்த இந்த முதல் யாத்திரையில் சுமார் ரூ. 4—11—6 க்கு சர்வோதய பிரசுரங்கள் விற்பனையாயிற்று. நான்கு 'சர்வோதய' சந்தாதார்களும் 192 "கிராமோதயம்" சந்தாதார்களும் சேர்ந்தனர்.

— ஏ. என். சின்னமுனிசாமி

திருவாரூர்

15—8—'54-ம் தேதி மாலை திருவாரூரிலிருந்து எட்டு பேர்கள் கொண்ட யாத்திரை கோஷ்டி புலிவலம் கிராமம் சென்று பூமிதான யக்ஞ பிரசாரம் செய்து வந்தது.

22—8—'54-ம் மாலை ஷை கோஷ்டியினர் 'அம்மையப்பன்' கிராமத்திற்குச் சென்று பிரசாரம் செய்தனர்.

'கிராமோதயம்' சந்தா 14 சேர்க்கப்பட்டது.

— ஆர். கே. வெங்கிடுசாமி

கடலூர்

நாளது 5—9—54 முதல் அகில பாரத சர்வ சேவா சங்க தமிழ் நாட்டு பிரதிநிதி ஸ்ரீ வ. பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள் தலைமையில் யாத்திரை ஆரம்பமாகும். தென்னாற்காடு ஜில்லா பூதான கமிட்டி கன்வீனர் ஸ்ரீ எம். ராமகிருஷ்ண ரெட்டியார் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ எஸ். ஏ. தெய்வநாயக ஐயா, ஸ்ரீ எம். வி. சுதர்சனம் நாயுடு அவர்கள் (தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி மெம்பர்) ஸ்ரீ எம். எத்திராஜுலு M. L. C. அவர்கள் ஸ்ரீ என். சுந்தரம் செட்டியார் அவர்கள் (கடலூர் தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி) ஸ்ரீ வி. எல். ராமகிருஷ்ண ரெட்டியார் அவர்கள் (மிராசுதார் கோழிப்பாக்கம்) வி. பாலகிருஷ்ண சேதுபதி அவர்கள் (ஜவஹர் சங்கத் தலைவர் மஞ்சகுப்பம்) ஸ்ரீ பி. வி. வெங்கடேசன் அவர்கள் (ஜி. கா. கமிட்டி காரியதரிசி) வேணுகோபால் அவர்கள் (ந. கா. கமிட்டி காரியதரிசி) முதலானவர்கள் யாத்திரை கோஷ்டியில் கலந்து கொள்வார்கள்.

— ஏ. வி. குப்புசாமி

சிதம்பரம் தாலூக்காவில் பூமிதான யக்ஞம்

சென்ற ஆகஸ்டு 15, 16, 17 தேதிகளில் சிதம்பரம் தாலூகாவில் நடந்த பூமிதான யாத்திரையின் பொழுது சர்வ சேவா சங்கத்தின் தமிழ் நாட்டு பிரதிநிதி திரு. அ. பாலகிருஷ்ண பிள்ளை அவர்களிடம் வாக்களித்திருந்தபடி கீழ்க்கண்ட நிலச்சுவான்தார்கள் தங்கள் பூமிதான காணிக்கைகளை 27—8—54 தேதி திரு. பாலகிருஷ்ண பிள்ளை அவர்களிடம் செலுத்தியுள்ளார்கள்.

கிராமம்.	நிலச்சுவான்தார் பெயர்.	ஏக்கர்.	மதிப்பு ரூ.
1. கீழ்நெடும்பூர்	ஸ்ரீ என் பி. சாமிநாதபிள்ளை (நஞ்சை)	1	3,000
2. மேலவன்னியூர்	ஸ்ரீ ஜி. கேசவம் பிள்ளை (புஞ்சை)	1	2,000
3. லட்சுமிகுடி	ஸ்ரீ எல். எஸ். சுப்பராயபிள்ளை (நஞ்சை) (சிதம்பரம் தாலூகா பூதான கமிட்டி கன்வீனர்-தாலூகா காங்கிரஸ் கமிட்டி தலைவர்)	1	3,000
4. மணக்குடையான் இருப்பு-புனவாசல்	ஸ்ரீ ஆர். சம்பந்தம் பிள்ளை (நஞ்சை) (சிதம்பரம் வடக்குவீதி)	1	3,000
	மொத்தம் ஏக்கர்....	4	11,000

— கே. எஸ். கோவிந்தசாமி

இந்த இதழில்

பாராட்டுகிறோம் 89
சிதம்பரம் தாலூக்காவில் பூமிதான யாத்திரை 89
தமிழ் நாட்டில் பூமிதான யக்ஞ யாத்திரைகள் 90
தங்கத்தின் தீங்கிழைக்கும் தன்மை 92
பூமிதான யக்ஞம் — அடிப்படையில் புரட்சிகரமான இயக்கம் 93
இந்திய விவசாயத்திற்கு இயந்திரமயமாக்கப்பட்ட பெரும்பண்ணைகள் பொருந்தாது 93

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)

"கிராமோதயம்" சந்தாவிபரம்:- தனிப்பிரதி 0—1—0 வருட சந்தா ரூ. 1—8—0 அகில பாரத சர்க்கா சங்கக் கிளைகளில் கிடைக்கும்.

Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.